ரசமான ஜன முதேறிஜன

விலை ரூபா 1:25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

வரை 27 ஆவணி 27 ஞாயிறு 26 இதழ் 214
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-9-1985

அரச கட்டடம் தகர்க்கப்பட்டது!

தளபாடங்களும் தீக்கிரை!!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள லபுலை உதவி அரசாங்க அதிபர் கட்டிடத்தை நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய தீவிரவாதக் கோஷ்டியினர் குண்டுவெடிப்பினால் தகர்த்துள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்தக்கட்டிடம் அண்மையில் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

குண்டுவைத்து தகர்த்த தீவிரவாதிகள் பின்னர் தளபாடங்களையும் முற்றாகஎரித்து நாசமாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே உதவி அரசாங்க அதிபரின் பாவனையிலிருந்த ஜீப்வண்டியொன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (பி)

கிராமங்களில் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பாதயாத்திரை மேற்கொள்ளவுள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று காலை ஒன்றுகூடி ஆலோசனை நடத்துவார்கள்.

யாழ் குடாநாட்டுக்குள் உள்ள கிராமங்கள்தோறும் இப் பாதயாத்திரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதயாத்திரையின்போது கிராமங்களில் கருத்தரங்கு, விளையாட்டு, கிராமிய சீர்திருத்த நாடகங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (மா)

சென்னை செல்ல 'ரொமேஷ்' தயார்

தீவிரவாதக் குழுக்கள் தயக்கம்!

(சென்னையிலிருந்து நமது கிறப்டி திருபர்)

இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக புதுடில்லியில் தயாரிக்கப்பட்ட செயல்திட்ட அறிக்கையை தமிழ்த் தீவிரவாதக்குழுக்களின் தலைவர்களுடன் விவாதிக்க இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி சென்னை செல்லத் தயாராக இருப்பதாகவும், ஆனால்தமிழ்த் தீவிரதாதக் குழுக்களின் தலைவர்கள்தான தயக்கமகாட்டி வருவதாகவும் புதுடில்லியில் கவலை தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தீவிரவாதக்குழுக்களின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரியை சென்னைக்கு அனுப்பி வைக்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எப்பொழுதும் தயாராக இருக்கிறார் என்று வலியுறுத்தும் புதுடில்லி வட்டாரங்கள்; இச்சந்தர்ப்பத்தை தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் ஏன் பயன்படுத்துகிறார்கள் இல்லை. அவர்களுக்கு அக்கறை இல்லையா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்று தெரிவித்த

(5ம் பக்கம் பார்க்க)

★ பிரதம கல்வி அதிகாரி பதவிஉயர்வு:

தமிழில் பரீட்சை எழுதிய அனைவருக்கும்'கழுத்தறுப்பு!'

(யாழ்ப்பாணம்)

பிரதம கல்வி அதிகாரி பதவி உயர்வுக்கு தமிழ் மொழிமூலம் பரீட்சை எழுதிய எவரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாததை ஆட்சேபித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சுக்கு கண்டனக் கடிதம் அனுப்பியுள்ளது!

பிரதம கல்வி அதிகாரி அல்லதுகல்விச்சேவை தரம் மூன்று

(8-ம் பக்கம் பார்க்க)

நாளை விடுமுறை

(கொழும்பு)

இலங்கை - இந்திய இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை பொது விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு சரவணமுத்துமைதானத்தில்நடைபெற்ற இப்போட்டியில் இறுதிக் கட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இலங்கை அணி வெற்றியீட்டியதை வெகுவாகப் பாராட்டி இந்த விடுமுறையை பிரகடனம் செய்தார்.

மினி பஸ்கள் கடத்தப்பட்டன

(வவுனியா)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொன்ராசாஞானசேகரம்என்பவருக்குச் சொந்தமான இரு மினி பஸ்கள் வவுனியாவில் வைத்து இனந் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டுள்ளன.

உண்ணாவிரதம் — ஊர்வலம்:

மாணவரை தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ் பல்கலைக்கழக மாணவர்

(யாழ்ப்பாணம்)

"வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்இளைஞர்களுக்கு ஆதரவாக நடாத்தப்படும் உண்ணாவிரதம், ஊர்வலங்களில் பாடசாலை மாணவர்களையும் ஒழுங்கற்றமுறையில் பயன்படுத்துவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது; இதுமுற்று முழுதாகத் தவிர்க்கப்படவேண்டும்"

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கவலைதெரிவித்துள்ளனர்

அவ்வறிக்கையில் மேலும்

(5ம் பக்கம் பார்க்க)

மக்கள் நடவடிக்கைக் குழு——————

வெலிகடை உண்ணாவிரதிகள் நிலையை நேரில் அறிய முடிவு

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களை நேரில் சந்தித்து நிலைமைகளை அறிந்து கொள்வதற்காகவும், இவர்களைச் சிறையிலிருந்து புடுவிப்பது தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திக்கலாமென்ற நோக்கத்தோடும் 'மக்கள் நடவடிக்கைக்குழு' உறுப்பினர்கள் விரைவில் கொழும்பு செல்லவுள்ளனர்.

யாழ் மலாடர் பெண்சனர்

(5-ம் பக்கம் பார்க்க)

'மரணதேவதை' பற்றி 'இந்து' தகவல் இது!

(சென்னை)

இலங்கைத் தமிழர் தீவிரவாதிகளுக்கு சிங்கப்பூர் வழியாக ஆயுதங்களை வழங்கப் பொறுப்பாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சிங்கப்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிங்கப்பூர் ஆயுத விற்பனை விநியோகஸ்தர் ஒருவர், இலங்கை அரசாங்கத்துடன் ஆயுத விற்பனை தொடர்பான பேச்சுக்களை நடத்த இலங்கை வந்திருந்தார் என்று 'இந்து' ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக மேலும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளதாவது:

"ஆயுத விநியோகத் துறையில் இந்த விநியோகஸ்தர் 'மரணதேவதை' என்று அழைக்கப்படுகிறார் விபட்ஞமில் மேலதிகமாகவுள்ள ரைபிள்கள், ஏவுகணைகள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிமருந்து போன்றவற்றினை இலங்கை அரசாங்கத்திற்கு விற்பனை செய்யவே ஆயுத விநியோகஸ்தர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்

இந்த வகையான ஆயுதங்களை ஒரு கொள்கலனில் வைத்து சென்னையிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்த நபர் அனுப்பி வைத்தார் என்றும், சந்தேகத்தின் பேரிலேயே கடந்த மே மாதம் இவரைச் சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மக்கள் வங்கிக் கிளைகள் இன்றுமுதல் இயங்கும்

22ம் திகதி முதல் மீண்டும் மறியல்

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கிக் கிளைகளின் முன்பாக நடத்தப்பட்டுவந்த மறியல் போராட்டம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஏற்கனவே அடகுவைத்தோர் சங்கம் அறி

(8ம் பக்கம் பார்க்க)

2 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

(மன்னார்)

சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினார்கள்.

மன்னாரிலுள்ள பரிகாரி கண்டல் எனுமிடத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது.

அருமைரஞ்சன் (18 வயது),

(5ம் பக்கம் பார்க்க)

அரசவளம்பரம்

பயிற்சி

மூன்று வருட மருத்துவ தாதிப் பயிற்சி ஆங்கில மொழி மூலம் டிப்ளோமா பயிற்சி ஆரம்பித்துவிட்டன: B.Sc. Nursing பட்டப்படிப்பு ஆரம்பமாக உள்ளது. இப்பயிற்சிக்கு O/Lல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும், A/Lல் நான்கு பாடங்களிலும் (Bio Science) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 30-9-85க்கு முன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்: அதிபர், உயர்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 660

தவறிவிட்டது

இல:-621341570V கணபதிப்பிள்ளை பாக்கியராசா, மீசாலை தெற்கு, மீசாலை என்பவருடைய அடையாளஅட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 671

இல:- 502070096V சோமசுந்தரம் இராஜேந்திரம் 29, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 678

தி. செந்தமிழ்ச்செல்வன், 'வேலணை கிழக்கு' வேலணை என்ற விலாசமுடைய எனது அடையான அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 664

தேவை

யாழ். நகரில் அமைந்திருக்கும் எமது ஸ்தாபனத்திற்கு தையலில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. தொடர்பு: விளம்பர இல: 655, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (655)

பருத்தித்துறை ப. நோ, கூ. சங்கம் அறிவித்தல்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் 1985 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. தேர்தல்கள் நடாத்துவதற்கான வாக்காளர் இடாப்பு 30-9-85ல் உள்ளபடி தயாரிக்கப்படவுள்ளது. முன்னர் சங்கத்தில் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களாக இருந்து பெருந்தொகையானோர் முழுப் பங்கின் பெறுமதியான ரூபா. 10/-ஐ செலுத்தாததின் காரணத்தால் வாக்களிக்கத் தகுதி அற்றவர்களாக உள்ளனர். 30-9-85 க்கு முன்னர் முழுப் பங்கொன்றைப் பெறுவதன் மூலம் சகல அங்கத்தவர்களும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை இடம்பெறச் செய்து சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்த ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம். புதிய அங்கத்தவர்களும் ரூபா. 10/- ஐச் செலுத்தி 30-9-85க்கு முன்னர் சேரும்படி வேண்டுகிறோம்.

செயலாளர்,
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், 1985.09.09

651

விற்பனைக்கு

ஈக்கு, தடி, தும்புத்தடி மொத்தமாக மலிவான விலையில் விற்பனைக்குஉண்டு. நேரில் வரவும். (76) 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 661

விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக் NV 7000 EN விற்பனைக்குள்ளது: விபரங்கட்கு: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665. 637

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

தேவை

கடையில் பணியாற்ற சிப்பந்திகளும் நன்கு அனுபவமுள்ள விற்பனையாளரும் தேவை நற்சான்றிதழ்களுடன் 15-9-85 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

ஞானம்ஸ் ரேட்ஸ்
(மலிபன் பிஸ்கற் விநியோகஸ்தர்கள்)
251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(682)

எமது புதிய வெளியீடுகள்

கறுப்புச் சட்டைக்காரன் (V. G. P. Oringal)
தியாகராஜன் – அம்பிகா

மற்றும் வேறு புதிய வெளியீடுகள்

நல்லூர் வீடியோ சென்ரர்
முத்திரைச்சந்தை – நல்லூர்.
(675)

A/L தூயபிரயோககணிதம்

ஆசிரியர்: RAVIMOHAN JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்)

A/L 87	A/L 86
சனி, ஞாயிறு வகுப்பு	பகல் நேர வகுப்பு
7-15: நியூட்டனின் விதி	10 30: காவிகள்
8-30; மீதிதேற்றம்	11-45: நேர்கோடு
ஆரம்பம்: Sept. 14	நடைபெறுகின்றது.

(670)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

எதிர்வரும் 15-09-85 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10 மணிக்கு கொடியேற்ற விழாவுடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது. இவ்விழா 29-09-85 ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேயர் பொங்கலுடன் நிறைவுறுகின்றது.

பகலில் திருவிழாக்கள் காலை 11-00 மணிக்குள்ளும் இரவு திருவிழாக்கள் மாலை 6-30 மணிக்குள்ளும் நிறைவுபெறும்.

23–9–85 திங்கட்கிழமை இரதோற்சவமும்
24–9–85 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(672)

விக்ரா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
(கலை, வர்த்தகத்திற்கு தனித்துவமான நிறுவனம்)

86 DAY CLASSES
ஆரம்பம் 16-9-85 காலை 8-00 மணி

A/L சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் 14-9-85 காலை 8-00 மணி

87 சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் 14-9-85 காலை 8-00 மணி

(643)

சிமெந்து தொழிற்சாலையில் வேலை செய்தோருக்கு முக்கிய அறிவித்தல்

சகல சங்கங்களினூடாகவும் வேலைவகித ஊடாகவும், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் 1981ம் ஆண்டு ஆனி மாதத்திற்குப்பின் வேலைசெய்தோருக்கு சம்பள நிர்ணய சபையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பள அடிப்படையில் வருமதியாகவுள்ள பணம் கொடுபட வேண்டுமாதலால், வருமதியாகவுள்ள பணத்தை பெற்றுத்தரும்படி கோரி கணக்கு விபரத்தை உதவித் தொழில் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இக்கணக்கு விபரத்தை கிறந்த அனுபவமுள்ளவர்கள் மூலம் தயாரித்துத் தருவதற்கு தொழிற்சாலை இலக்கம், வேலைசெய்த நாள், மேலதிக நேரம் பிரிவு ஆகிய விபரங்களுடன் எழுபது ரூபாவும். ரூ 70/-கொடுபடல் வேண்டும்.

க. கைலாசபிள்ளை,
7-ம் கட்டை ஒழுங்கை,
மலைநாடு. 636

கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு

வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்

கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கம் 7000 (ஏழாயிரம்) வெற்றுச் சாக்குகளைக் கேள்விப்பத்திர மூலம் விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளது. இச்சாக்குகளுக்கான கேள்விகோர விரும்புவோர் 30-09-85-க்கு முன்னதாக, தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்குக் கேள்விப்பத்திர விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது தயவுசெய்து உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச்சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படுதல்வேண்டும். முடிவு திகதிக்குப்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- இச்சங்கத்தில் கட்டிப் பற்றுச்சீட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சனி, ஞாயிறு, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த காரியாலய நாட்களில் எமது முல்லைத்தீவுச் சாக்குக் களஞ்சியத்தில் வெற்றுச்சாக்குகளைப் பார்வையிடலாம். சாக்கை நீங்கள் பார்வையிட்டே தரம் பிரித்து விலை நிர்ணயித்து எமக்கு அனுப்பவேண்டும். நீங்கள் அனுப்பிய விபரப்படியே தெரிவு நடைபெறும். தெரிவுசெய்யப்பட்டவர் சாக்கைப் பெறும்போது விலையிலோ, சாக்கிலோ எதுவித மாற்றமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

பொதுமுகாமையாளர்
கரைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு. 30-08-1985. 640

3-வது ஆண்டு நினைவஞ்சலியும் திதியும் - 12-09-1985

திருவாட்டி சின்னத்தம்பி சௌந்தரநாயகி அம்மாள்
(மல்லாகம்)

அன்னையின் மடியில்:
03–04–1915

சிவன் அடியில்:
17–08–1982

அன்புத் தெய்வமே! நீர் எம்மை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகளாயினும், உமது இதயத்தில் ஒளியாய் நீர் இருக்கிறீர். தங்கள் ஆத்ம சாந்தி பூசையும், திதியும் உமது குல ஆலயத்தில் இன்று நடக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
துணைவனும், உறவினரும்.

கோணப்புலம் வீதி,
மல்லாகம். (656)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக

மதுரையில் மாணவர் ஊர்வலம்!

கல்லூரிகள் 18-ம் திகதி வரை மூடப்பட்டது

(மதுரை)

இலங்கைத் தமிழர் மீதான கொடுமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மதுரையில் இரண்டாவது தினமாக நடந்த மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தொடர்ந்து மதுரை மாவட்டத்திலுள்ள சகல கல்லூரிகளும் இம்மாதம் 18-ம் திகதிவரை மூடப்பட்டுள்ளது.

மதுரையில் நேற்று சில கல்லூரி மாணவர்கள் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலத்தின் பின்னர் மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றார்கள் என்று பொலிசார் தெரிவித்தனர்.

மதுரையில் நிலைமை மோசமாகி வருவதைத் தொடர்ந்து சகல பள்ளிகளும், கல்லூரிகளும் இம்மாதம் 18ம் தேதிவரை மூடப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார்.

அன்னு மாவட்டத்திலும் சகல கல்லூரிகளும் இம்மாதம் 18ம் தேதிவரை மூடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஈ)

பஞ்சாப், ஹரியானா அரசுகளிடம் அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

[புதுடில்லி]

ஹரியானா, பஞ்சாப் மாநில அரசுகள் இந்த மாதம் 23ம் தேதிக்குள் எல்லை மற்றும் ஹிந்தி பேசும் மக்கள் வாழும் பகுதிகளின் இணைப்புக் குறித்த தங்களது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கமிஷன் தெரிவித்துள்ளது.

பஞ்சாப்பிற்கு சாண்டிகார் அளிக்கப்படுவதன் காரணமாக பஞ்சாப் மாநிலத்திலுள்ள எந்தெந்த ஹிந்தி மொழிபேசும் பகுதிகள் ஹரியானாவிற்குத் தரப்படவேண்டுமென்று ஆராய சென்ற மாதம் 20ம் திகதியன்று இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

இந்த இரண்டு மாநிலங்களிலிருந்து பொதுமக்களின் கருத்துக்களைக் கமிஷன் வரவேற்றிருக்கிறது. இரண்டு மாதத்திற்குள் கமிஷன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும். (ஈ)

தமிழர் படுகொலைகளைக்கண்டித்து——

சென்னைநகரில் திரைப்பட நடிகர், நடிகைகள் ஊர்வலம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப் படுவதைத் தடுத்து நிறுத்த உடனடியாக இந்திய அரசு தலையிட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி சென்னை நகரில் திரைப்பட நடிகர், நடிகைகள் ஊர்வலம் நடத்தினார்கள்.

வீதியோரங்களில் சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நின்று தங்கள் ஆதரவை இவர்களுக்குத் தெரிவித்தனர்.

ராஜ்பவனுக்கு ஊர்வலமாகச் சென்ற துவர்கள், ஆளுநரிடம் மனுவொன்றைக் கையளித்தனர்.

இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள் திரு. பாலசிங்கம், திரு. சத்தியேந்திரா ஆகியோருக்கு உடனடியாக விஸா வழங்க வேண்டுமென்றும் இவர்கள் கோரியுள்ளனர். (ஈ)

"இந்திய அரசுக்கும் தமிழர்பிரிவுகளுக்குமிடையில்

பிளவுகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு முயலுகிறது!"

விடுதலை புலிகள் குற்றசாட்டு

(சென்னை)

தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கிடையேயும், இந்திய அரசுக்கும் தமிழர் பிரிவுகளுக்கிடையேயும் பிளவை ஏற்படுத்தும் வகையில் இலங்கை அரசு தனது ஆதிக்க அமைப்பை பயன்படுத்தி கொள்ள முயற்சிக்கிறது என்று தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் அமைப்பு நேற்று சென்னையில் குற்றஞ் சாட்டியுள்ளது

திருமலையில் முன்னாள் கூட்டணி எம்பி திரு சம்பந்தனின் இல்லம் தாக்கப்பட்டதற்கு விடுதலை புலிகள் தான் காரணம் என்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டை மறுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் தமிழர் பிரிவுகளுக்குமிடையில் ஒரு பிளவை ஏற்படுத்தும் முயற்சியே இது என்று தெரிவித்துள்ளது

திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதப்படைகளை பயன்படுத்தி தமிழர் பகுதிகளை தங்கள் வசம் கொண்டுவரும் முயற்சியிலிருந்து கவனத்தை திசைதிருப்ப அரசு முயற்சித்து வருவதாகவும் இந்த அமைப்பு கூறியுள்ளது.

வல்வெட்டித்துறையில் ஏராளமான சிங்கள சிவிலியன்களை வெள்ளை உடைபணிந்து துப்பாக்கி, கத்திகள் போன்ற ஆயுதங்களால் தமிழர்களை தாக்கி அவர்கள் இலங்கைக்கு தீவிட்டுவருவதாகவும், இந்த அமைப்பின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் திருமலை மாவட்டத்தில், நிலாவெளி, சாம்பல் தீவு பகுதிகளில் பாதுகாப்பான இடங்களிலிருந்து தமிழ் போராளிகளை வெளியேற்றுவதற்கு இலங்கை பதோபஸ்து படையினர் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட இரண்டு முயற்சிகளை போராளிகள் முறியடித்து விட்டதாக ஏஜன்ஸி செய்தியொன்று கூறுகிறது.

திருமலை நகருக்கு சுமார் 15 மைல் வடக்கேயுள்ள இந்த இருகிராமங்களிலும் பாதுகாப்புபடையினர் ஒரே சமயத்தில் தாக்குதல்களை நடத்தியதாகவும் ஆனால் போராளிகளின் பாதுகாப்பு எல்லைக்குள் இவர்கள் நுழைய முடியாமல் தடுக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் நிலாவெளி பகுதியில் குண்டுவீசி தாக்குதல் நடத்த கவசவாகனங்களை இராணுவத்தினர் பயன் படுத்தியதாகவும் சாம்பல்தீவில் போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் ஒளிந்திருக்கும் இடங்களைத்தேடி இவர்களை கண்டுபிடிக்க விமானப்படை ஜெலிக்கோப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டதாகவும் ஏஜன்ஸி செய்தி கூறுகிறது.

நிலாவெளியில் பாடசாலை கட்டடம் ஒன்றும்சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

நிலாவெளியில் உள்ள சுமார் 25 000 பேரும் சாம்பல் தீவில் உள்ள சுமார் 10,000 பேரும் பாதுகாப்புதேடி அருகாமையிலுள்ள காட்டுப்பகுதிக்கு ஓடிவிட்டதாக கூறப்படுகிறது

இவர்களில் பெரும்பாலோர் சம்பத்திய கலவரங்களினால் பாதிக்கப்பட்டு பிற இடங்களிலிருந்து அகதிகளாக வந்தவர்களாகும். (ஈ)

குண்டு வைத்து தகர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 15-ம் கொலனி சென்றல் காம்பிலுள்ள அரசாங்க டிஸ்பென்சரி குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. (மா)

தென்னாபிரிக்கா மீதான தடை:

ஒருமனதான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை!

(லண்டன்)

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பின் கூட்டம் தென்னாபிரிக்கா மீதான தடைகள் விஷயத்தில் ஒருமனதான உடன்பாடு ஏற்படத் தவறிவிட்டது.

மற்ற உறுப்பு நாடுகள் ஆமோதித்த பல நடவடிக்கைகளை ஆக்கிரமிக்க பிரிட்டன்மட்டும் மறுத்துவிட்டது. மற்ற 9 நாடுகள் ஆமோதித்த தடைகளில் ஆயுத விற்பனைத் தடையும், பொருளாதார ஒத்துழைப்புத் தடையும் அடங்கும்.

இராணுவ அதிகாரிகளை விலக்கிக்கொள்வதும் தென்னாபிரிக்காவுடன் கலாசார விளையாட்டுத் துறைத் தொடர்புகளை அகற்றுவதும் இத்தடைகளில் அடங்கும். (ஈ)

2 கோடி ரூபா பெறுமதியான பாம்புத்தோல்கள் அகப்பட்டன

(கொச்சி)

2 கோடி ரூபா பெறுமதியான 60 000 பாம்புத்தோல்கள் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு கடத்தப்படவிருந்த சமயம் கேரள மாநிலத்தின் கொச்சி சுங்கப்பகுதி யினரிடம் அகப்பட்டு கொண்டது சுங்கப் பகுதியினர் இவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வேறு நாடுகளுக்கு பாம்புத்தோல் ஏற்றுமதி தடை செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

பாதுகாப்பளிக்க அரச அதிபர்கள் கோரிக்கை

(கொழும்பு)

மதவாச்சிப்பகுதியில் அண்மைக்காலமாக வடபகுதித் தமிழ் பிரயாணிகளுக்கு ஏற்பட்டுவரும் உயிர்ச் சேதங்களைத் தொடர்ந்து மேலும் இச்சம்பவங்கள் இடம்பெறாமல் பூரணபாதுகாப்பு அளிக்குமாறு வாழ்ப்பாணம் வவுனியா மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்

அநுராதபுரம் அரசாங்க அதிபருக்கும், பாதுகாப்பு இணைப்பு அதிகாரிக்குமே பாதுகாப்புச்சம்பந்தமான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (மா)

ஆனைக்கோட்டையில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைகளில் வாடும் இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக ஆனைக்கோட்டை அடைக்கலமாதா கோவில் முன்றலில் நேற்று புதன்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஐக்கிய சனசமூக நிலையம், மகளிர் மன்றம், மாதர்சங்கம், மீன்பிடித் தொழிலாளர் சங்கம் ஆகியன இணைந்து நடாத்திய இவ்வுண்ணாவிரதம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடைந்தது. (ச)

மணிவாக்கு

மரண வைபவங்கள் பல சிலவேளைகளில் எவ்வாறு வைத்தியனின் அவநம்பிக்கை ஏற்படுத்துகின்றனவோ அவ்வாறே தண்டனைகள் அதிகரித்தால் அரசு அபகீர்த்திக்குள்ளாகிறது;

— பெஞ்ஜோன்சன்

நமது நோக்கு

அவசரகாலமா அல்லது அழிவுகாலமா?

சட்டங்களில்முதன்மையானது சட்டங்களுக்கு மதிப்பளித்து நடப்பதே! இந்த மதிப்பை பெறமுடியாதவட்டத்தில் அதற்குப் பதிலாக தண்டனைகள் சிந்தனை வளமற்ற சிறு மனசு படைத்தவர்களின் கண்டுபிடிப்பே

பிரெஞ்சுப்புரட்சிக்கு வழிகாட்டிய இருபெரும் தத்துவ மேதைகளில் ஒருவரான ரூசோ இக்கருத்தை வழங்கியிருக்கிறார்.

எமக்கு நாட்டில் அறிந்தோ அறியாமலோ புரட்சியென்று கொள்ளுமளவிற்கு இளைஞர்கள் புரட்சிகரமான முறையில் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் நாடளாவிய இளஞ்சமுதாயம் ஒரு பொது நோக்கைக் கொண்டிருப்பது பேரச் தோன்றுகிறது.

தமிழ் இளைஞர் போராட்டம் இந்த மனப்புரட்சியின் ஒரு அம்சம்; அவர்களின் ஆயுதப் போராட்டம் நாடளாவிய உண்மைப் புரட்சிக்கு விதை இடுமோ என்பது சொல்லமுடியாத காரியம்.

பாரிஸில், புரட்சிக்காலத்தில் நடந்த கொடுமைகள் போல் இக்கும் நடைபெறுவது, ஆங்கில நாவலாசிரியர் டிக்கென்ஸ் எழுதிய 'இரு நகரங்களின் ஒரு கதை' என்ற நூலை நினைவுபடுத்துகிறது.

அக்காலத்தில் அங்கு மரமக்கொலைகள் சாதாரணம்: அதேபோல அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கோரக் கொலைகள் ஒரு பயங்கரநிலையை உருவாக்குகின்றன.

மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணித்த இரு பாராளுமன்ற அங்கத்தவர்கள் கொலைசெய்யப்பட்டது பற்றி ஆசிரியருக்கு ஒப்பாரி போன்ற கடிதங்கள் வருகின்றன.

பொதுஜன உணர்வை மூக்கூட்டியே மதிப்பிட்ட எமக்கு கண்டதையும் பிரசுரிக்கமுடியாத நிலையில், அவற்றின் பொதுவான கருத்தை விமர்சிக்கும் பொறுப்புண்டு.

அரசியற் கொலைகளைப் 'பயங்கரவாதம்' என்று கொண்டு அதனைத் தடுக்க இயற்றிய சட்டம் இத்தனை வருடங்களுக்குப் பின் ஏற்படுத்திய சாதனைகள் என்ன?

பத்து வருடத்துக்கு மேல் தொடர்ந்து நடைபெறும் இவ்வித கொலைகள் அன்று பாரிஸில் நடைபெற்ற கொலைகள் போல் மதிக்கப்படுவதானால் அதற்கு முதற் காரணம் அவசரகால ஆட்சியும், பயங்கரவாத தடைச் சட்டமுமே.

இந்தக் கருத்தை நாம் மட்டுமல்ல தெனிலங்கை அரசியல்வாதிகள், சிந்தனை வாளர்கள் பலர் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கின்றனர். இன்று வெளிக்கண்டத்திலும் வெளியிலும் நடைபெறும் உண்ணாவிரதங்கள் எதனைக் குறிக்கின்றது?

'சர்வதேச பயங்கரவாதம்' என்றொரு சாமான் உண்டு; அதனை நன்றாகப் பயன்படுத்தும் அமெரிக்க ஜனாதிபதி றீகன் தானும் பயங்கரவாதத் தடைச் சட்டம் எதனையும் தான்தோன்றித்தனமாக இயற்றுவதற்கு அமெரிக்க உயர் நீதிமன்றமும், அமெரிக்கப் பத்திரிகைகளும் இடங்கொடா

இதனைத் தடுக்க உருவாக்கப்பட்ட நகல்சட்டமொன்று ஐரோப்பிய நாடுகளில் விவாதிக்கப்பட்ட போது, ஜனநாயக ஆட்சி முறையில் முதிர்வுற்ற பிரான்ஸ் போன்ற நாடுகள் எவ்வித அடக்குமுறைகளையும் ஆதரிக்கவில்லை.

இவ்வித சட்டம் சாதாரண மனிதனுக்குப் பெருமளவில் ஆபத்து ஏற்படுத்தும். சாதாரண அமைதியான சிவில் வாழ்வு பாதிக்கப்படும். நாட்டின் சுயரூபம் நிலைகுலையுமென்று பல அறிஞர்கள் வாதாடி எதிர்த்திருக்கின்றனர்;

இவ்வித எதிர்ப்புக்குத் தலைமைதாங்க வேண்டிய பிரிட்டன் 'வட அயர்லாந்து' என்னும் பிரதேசப் பிடித்து நிலைமாறி நிற்கின்றது; அதற்குத் தூபமிடும் 'தாட்சரிசம்' பிரிட்டனின் ஜனநாயக மனிதாபிமான மரபுக்கு ஒரு தற்காலிக சாபக்கேடெனலாம்.

பயங்கரவாதம் எங்கு நிகழ்ந்தாலும் அது நரபலியை நாடி நிற்கும்: அதனை அகற்றுவதை யார் ஆட்சேபிக்கமுடியும்?

இங்கு அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் குறை என்றும், அதனைத் தடுப்பதற்குப் பதிலாக அதனை வளர்த்துவருவதாக இன்று பயங்கரக் கொலைகள் தொடர்வதும் மக்கள் பாதுகாப்பின்றி வாழ்வதும் சாதாரணம்.

அரசியல் கொலை மனிதக் கொலையே; கொலை வழக்குகள் எத்தனை நேரகாலத்துக்கு விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்குப் பயங்கரவாதச் சட்டம் பரிகாரம் என்றால்; இந்த நோய்பிடித்த பிரதேசம் தமிழ்மக்கள் சாதாரணமாக அமைதியாக வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு மகாணங்கள். இங்கு வாழும்பல்லாயிரம் இளைஞர்கள் இன்று போராளிகள் அல்லது தடுப்புக் காவலில் வாடும் கைதிகள்.

பரிகாரம் இங்கு கண்டவினைவென்ன? சிவில் ஆட்சி பறந்தோடிவிட்டது. அரசின் ராணுவம் தங்களையோ இங்குள்ளமக்களையோ பாதுகாக்க முடியவில்லை.

விடுதலைக்குத் தம்மை அர்ப்பணித்த தமிழ் இளைஞரின் பரிவிலும் பராக்கிரமத்திலும் தங்கவேண்டிய நிலை; அதனால் அந்த இயக்கங்களுக்கு ஆதரவு.

என்றுமில்லாத ஆதரவு இந்த இயக்கங்களுக்குக் கிடைப்பதைப் புரியமுடியாத பாதுகாப்பு அமைச்சு, தமிழன் என்றால் பயங்கரவாதி என்ற சுலோகத்தில் எவ்வித கட்டுப்பாடும் பயிற்சியும் அற்ற ராணுவத்தைச் செயற்படுத்துகின்றது.

எனவே, அரச சட்டங்கள் செல்லாக் காசான தமிழ்ப் பகுதிகளில் மக்களுக்கு எதிரான கொலை கொள்ளை போன்ற பயங்கரச் செயல்களிலிருந்து பாதுகாப்பது இயக்கங்களின் பெரும் பொறுப்பு.

பேதம் எதுவானாலும், இந்தப் பொறுப்பை அலட்சியம் செய்தால் பயங்கரகால ஆட்சி கொலை ஆட்சியாக மாறி அழிவென்னும் குழியில் அனைவரையும் தள்ளிவிடும்.

இலங்கைத் தமிழர் பிரச்னை

பி. பி. ஸி. நிருபரின் ஆழமான விமர்சனம்

(லண்டன்)

"இலங்கைத்தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணப்படாத பட்சத்தில், தமிழர்களும் சிங்களவர்களும், தங்கள் சுதந்திரத்தை இழக்கக் கூடிய விதத்தில் இந்தியா தனது ஆதிக்கத்தை இலங்கை மீது செலுத்தக் கூடிய ஒரு நிலைமை உருவாகும்" என்று லண்டன் பி. பி. ஸி. நேற்று முன்தினமிரவு தன் அரசியல் விமர்சனத்தில் தெரிவித்தது.

மறைந்த பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழ் போராளிகளுக்கும், தமிழ் ஈழக்கோரிக்கைகளை முன்வைத்தவர்களுக்கும் பூரண ஆதரவு கொடுத்து வந்ததாகவும் அவரின் மறைவிற்குப்பின்னர் ஆட்சிக்குவந்த பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தாயார் கடைப்பிடித்து வந்த கொள்கையை மாற்றி, நடுநிலைமைக் கொள்கையைக் கையாண்டார் என்றும் மேற்படி பி பி ஸி விமர்சகர் தெரிவித்தார்.

போர் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு இலங்கை அரசையும் தீவிரவாதிகளையும் ஒரே இடத்தில் சந்திக்க வைத்து சமாதான முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர திரு. ராஜீவ்காந்திமுயன்று வருவதாகவும, சிறுபான்மைத் தமிழர்களுக்கு இலங்கை அரசைக் கொண்டு அவர்களின் சில கோரிக்கைகளை ஏற்கச் செய்வதுடன் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் சமாதானம் நிலவுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தப்பார்க்கிறாரென்றும், இதனை சில இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அந்தவிமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஒருபகுதியை தங்கள் வசம் வைத்துக்கொண்டு மற்றப் பகுதிகளை கைப்பற்ற போராடக்கூடிய விதத்தில், தமிழ்ப்போராளிகள் பலம்வாய்ந்தவர்கள் அல்ல என்றும், ஆனால் ஸ்ரீ லங்கா அரசின் பலவீனம் காரணமாக தமிழ்ப்போராளிகள் பலமாக கொல்லப்படுவதாகவும் இவ்வகையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருந்தாலும், தென்னாசியாவை பொறுத்தவரையில் அவர்கள் சிறுபான்மையினரென்றும் தென் இந்தியத் தமிழரும், தென்னாசியாவில், சிறுபான்மையினரல்ல வென்றும் தமிழ்ப்போராளிகள் இதனைச் சாதகமாக வைத்துக்கொண்டு செயலாற்றிவருகிறார்கள் என்றும், விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக சில இயக்கங்கள் பிரதமர் ராஜீவ் காந்தியின் உதவியை எதிர்பார்க்காது, தென்னிந்தியாவின் உதவியுடன் மத்திய அரசை அடிபணியவைக்க முயற்சிப்பதாகவும், இவ்வகை பிரச்னைக்கு 'தமிழ் ஈழம்' தான் ஒரே தீர்வு என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்ட தமிழ்ப்போராளிகளும், தென்னிந்திய மக்களும் முயலுகிறார்கள் என்றும் விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் கருத்து

இருபகுதிப் போராளிகட்கும் பணிவான வேண்டுகோள்!

நிறுத்துங்கள்! சகோதரர்களே!! கொலை பாதகத்தை நிறுத்துங்கள்!!! "விளங்கற்கரிய இறைவர! சேவைமனப்பான்மையும் பொதுநலஉணர்வும் உளர் இறுமிமானியர்கள் இருவரை ஆய்ந்து ஒய்ந்து பாராதவகையில் தப்பிதமாகக் கொல்லப்பட்டார்கள்; அவர்களை மன்னித்தருளும். என்ன செய்குறார்கள் என்பதை அவர்கள் அறியார்கள்" என முதலாவதாகப் பிரார்த்திக்க வேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக தனிநாடு பெறுவது அசாத்தியமென்றும். அதற்கு எந்த நாடும் ஆதரவில்லையென்றும் போதிய அதிகாரம் வழங்காத மாகாண மன்றங்கள் போலன்றி உண்மைச் சமஷ்டி வழங்கப்படுமாயின் அதனை அங்கீகரித்தல் உத்தமமென்றும், நாட்டில் சமயத்துக்கும், சனநாயகத்துக்கும். சகோதரத்துவத்துக்கும், சமதர்மத்துக்கும் முதன்மையளிக்கப்படவேண்டும் என்றும், பேரிய ஆராய்வின்றி எவருக்கும் மரணதண்டனை விதிக்கக்கூடாதென்றும் வற்புறுத்துகின்றேன்,

மூன்றாவதாக, தர்மத்தைக் காக்கும் பொருட்டுச் செய்யப்படும் கொலை பாதகமற்றதாயினும், தாய்நாட்டின்பேரில் சிங்களப் போராளிகள் தமிழ் அப்பாவிகளைக் கொல்வதும், தமிழ்ப் போராளிகள் சிங்கள அப்பாவிகளைக் கொல்வதும் பஞ்சசீலம்போற்றும் புத்த தர்மத்துக்கும், இந்து தர்மத்துக்கும், சர்வதேச யுத்த தர்மத்துக்கும் முற்றும் முரண்பாடானது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான்காவதாக உலகில் கழுத்தறுபடும் வகுப்புவாதத்துக்குக் கண்கண்ட மருந்து சமஷ்டி ஆதலின், நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் இப்போதையநெருக்கடியானநிலைமை மென்மேலும் மேசாமடைவதற்கு முன்னம் இலங்கை அரசாங்கம் தமிழர்கட்கு உண்மைச் சமஷ்டியை வழங்கித் தமிழரைச் சமாதானப்படுத்தவேண்டும். இந்தியப் பிரதமர் இயக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையில் தனிநாட்டுக் கோரிக்கைக்குச் சற்றும் இடமில்லையென்கிறார் அவருடனோ அல்லது அவரின் நாட்டுடனோ முரண்படுதல் வெளிநாட்டுதவி வேறேதுமில்லாத இலங்கை தமிழர்களுக்குப் பெரும் கேட்டை விளைவிக்கும் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

சட்டத்தரணி
வ. இராசநாயகம்

கரணவாய் வடக்கு எள்ளங்குளம்பதி நாச்சிமார் ஆலய சங்காபிஷேகம்

அத்தி, அரச, ஆல், இத்தி, ஓதிமை வேப்பமரங்களினால் சூழப்பெற்று அழகும், எழிலும், புதுமைகளும் நிறைந்து விளங்கும் கரணவாய் வடக்கு எள்ளங்குளம் எனும் பதியில் வீற்றிருந்து அடியார்கள் பத்தவினை போக்கி அருள் பாலித்துவரும் அன்னை ஸ்ரீ நாச்சிமாருக்கு இன்று சங்காபிஷேகம் நடைபெறுகின்றது

இவ்வாலயத்தின் சிறப்புகள் பற்றி கூறுவதற்கு இக்கு இரவு நேரங்களில் உறையும் பசுக்கூட்டங்களும் வெள்ளி தோறும் நடைபெற்று வருகின்ற பொங்கல்களுமே போதும் சிறிய கட்டிடங்களாக விளங்கிய இவ்வாலயத்தை மிகவும் நல்லமுறையிலே, அழகுற அமைக்க வேண்டுமென எண்ணிய இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவும், பூசகருமாகிய வாரிசாமியார் அவர்கள் இவ்வாலயத்தை வாலஸ்தாபனம் செய்து புதிய ஆலயம் ஒன்றிற்கு அத்திவாரம் இட்டார். அன்றிலிருந்து அம்பாளின் திருப்பணிவேலைகள் துரிதமாக நடைபெறலாயிற்று வேலைகள் நடைபெற்றுவரும் நாளில் 1969 ஆம் ஆண்டளவில் இவ்வாலயத்தின் பூசகர் வாரிசாமியார் அவர்கள் இறைபதம் எய்தினார்கள். அவரைத் தொடர்ந்து அவரது சந்ததியினராலேயே இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. 1984 ஆண்டு இவ்வாலயம் பொதுமக்களின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது தொடர்ந்தும் முன்னாள் தர்மகர்த்தாவாக விளங்கும் பழனிநாதன் அவர்களாலேயே பூசைகள் நிகழ்த்தப்பட்டுவருகின்றது

இவ்வாலயம் தீராத பிணி தீர்த்தது மாருதோய்களுக்கு மருந்தளித்து அடியார்களுக்கு வாழ்வளித்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் இன்னும் உண்டு. இவ்வாலயத்தின் அருகே மிகவும் அற்புதம் வாய்ந்த முனீஸ்வரன் ஆலயம் ஒன்று அமைந்திருக்கின்றது. தாடி, வேட்டைப்பல் ஆகியவற்றோடு கூடிய முனீஸ்வரன் ஆலயம் எல்லா இடங்களிலும் அமைவது மிகவும் அபூர்வமானது என சிவாச்சாரியார்கள் கருதுகின்றார்கள். இங்குகாணப்படுகின்ற முனீஸ்வரன் ஆலயம் தாடியோடும், ஒருகால் கட்டையாகவும் அமைந்திருக்கின்றது இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக ஸ்ரீ முத்துமாரி அம்பாளே கொலுவீற்றிருக்கிறாள் ஆயி

(5-ம் பக்கம் பார்க்க)

நற்கதி அருள்வாய் நல்லூர்க் கந்தா

நற்கலை நிறை நல்லூர்ப் பதிதனில்
பல்பொருள்மிகு சிற்பத் தேரில்வரு குகா
பொற்பதம் பணியும் புண்ணிய அடியவர்க்கு
நற்கதி அருள்வாய் நம்மினிய கந்தவேளே!

செ. சுப்பிரமணியம்

31-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

முருகுப்பிள்ளை விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற கட்டிடப் பரிசோதகர்)

தோற்றம்:
23-01-1918

மறைவு:
13 08-1985

அன்புத் தெய்வத்தின் மறைவினால் கலங்கி நிற்கும் எமது துன்பத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி 12-9-85 விளாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன், பேரப் பிள்ளைகள்:
இல. 6. அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (679)

ஆறுத பாச அலைகளுடன்

6-வது ஆண்டு நினைவஞ்சலி

திரு. கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர், வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17-07-1913 மறைவு: 20-08-1979



"நீர் இந்த வேளை தன்னில் சேய்கள்—
எமைமறந்தாக்
நாம் இந்த மாநிலத்தில் ஆறுதல் யாரிட்மோ"

அன்புள்ள அப்பா,

நல்லூர்க் கந்தனின் சப்பறத் திருவிழா நடைபெறும் பெருநாளாகிய இன்று ஆறுத நினைவஞ்சலியுடன் உங்களது ஆறுவது ஆண்டு திவசம் நடைபெறுகின்றது. இந்நாளில் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை மனமார இறைஞ்சி நிற்கும்:

உங்கள் அன்பு மனைவி,
ஆருயிர் செல்வங்கள், அன்பு மருமக்கள்,
அருமைப் பேரப் பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

110, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். [684]

'சைவசிகாமணி' சிவராமலிங்கபிள்ளை

யாழ்: நகரில் தமிழ் விழாவா? சைவ விழாவா? பட்டிமன்றமா?

எங்கே இடம் பெற்றாலும் அங்கே ஒலிக்கும் கணீர்! கணீர்!! என்ற வெண்கலக் குரல்—

அது; யாழ். இந்துக் கல்லூரியின் சொந்தக்குரல். 45 ஆண்டுகளாக அக்கல்லூரியில் ஒலிக்கும் குரல். ஆம்! அதுதான் சைவசிகாமணி திரு. க. சிவராமலிங்கபிள்ளையின் குரல்.

திரு க.சிவராமலிங்கபிள்ளை 1941 ஆம் ஆண்டிலிருந்து மாணவனாய், மாணவர்களின் தந்தையாய், ஆசிரியனாய், ஆசிரியர்களின் வழிகாட்டியாய் இறுதியாக உப அதிபராகவிருந்து 16-9-1985 இல் தமது 60 ஆண்டு பூர்த்தி காரணமாக இக்கல்லூரியில் 35 ஆண்டுகால பூரண ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெறுகிறார்.

சைவத்தையும் தமிழையும் இக்கல்லூரியில் வளர்த்த பெரியார்கள் வரிசையில் மிகவும் உயர்ந்த இடத்தை வகிக்கும் இவர் ஓய்வு பெறுவது வாழ். இந்துக்கல்லூரிக்கு மட்டுமல்ல தமிழ் மாணவ உலகிற்கே மாபெரும் நஷ்டமாகும்.

பெரியார் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரின் தமிழுக்கும் சமயத்திற்குமான சேவை என்றென்றும் தமிழ் உலகிற்கு உண்டு என்று திண்ணமாக நம்பலாம்;

தன் சொந்தக் மண்ணுக்குச் சேவையாற்றுமுகமாக ஆசிரியப்பணியை யாழ் இந்துக்கல்லூரியில் மேற்கொண்டார். இவரது சேவையின் உச்சக் கட்டத்தில் இக்கல்லூரியின் உபஅதிபராக இருந்து இப்போது இளைப்பாறுகிறார்.

தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை விஞ்ஞானத்துறை, விளையாட்டுத்துறை, சாரணியம் போன்ற சகல துறைகளிலும் இவரது பங்கு அளப்பரியது.

இவர் எமது கல்லூரிக்கு வெளியேயும் அகில இலங்கை சேக்கிழார் மன்றம், கொழும்பு விவேகானந்தசபை, சைவபரிபாலனசபை என்பவற்றின் முக்கிய உறுப்பினராகவிருந்து பிரதம பரீட்சகராக கடமையாற்றியுள்ளார். அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகரிலும் இவர் ஒருவராவர்.

இவர் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றிவரும் தொண்டைக் கருதி நல்லை ஆதீனம் "சைவசிகாமணி" என்ற பட்டமளித்து கௌரவித்துள்ளது.

இத்தகைய தொண்டுகளை உலகிற்கு அளிக்க உறுதுணையாகஇருந்தஇவரது வாழ்க்கைத் துணைவியார் ஆசிரியை ஞானபூரணிக்கு தமிழ் கூறும் உலகம் என்றும் கடப்பாடுடையதாகும்.

இவர் ஒரு சில ஆண்டுகள் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் சிறப்பு சமய பாட விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளமையும் நினைவுகூர வேண்டிய செய்தியாகும்.

நா. நல்லையா

(தலைவர் - யாழ் இந்து ஆசிரியர் கழகம்)

புங்குடுதீவு சித்தாந்தச் செம்மல் சி. கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக பிறந்த திரு க. சிவராமலிங்கம் பிள்ளையவர்; இளைய சகோதரன், ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் இருவரும் சைவத்திற்கும் தமிழிற்கும் சேவை செய்வதற்கென்றே பிறந்தவர்கள்.

திரு; சிவராமலிங்கபிள்ளையவர்கள் ஆரம்பக்கல்வியை புங்குடுதீவில் பெற்று 1941 ஆம் ஆண்டில் யாழ். இந்துக்கல்லூரியில் ஏழாம் வகுப்பில் சேர்ந்தவர் அன்றிலிருந்து இன்று வரை யாழ் இந்துக் கல்லூரியுடன் இரண்டறக் கலந்து விட்டார். கல்லூரியில் இவர் மாணவ முதல்வனாகவும் விடுதி மாணவ முதல்வனாகவும் விளங்கியதோடு தமிழ் மன்றத்தின் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பிரிவு மாணவனாகவிருந்தும் தமிழில் உள்ள ஆர்வத்தால் இவர் ஓர் கலைபட்டதாரியானமை இவரின் தமிழ் உள்ளத்திற்கு நல்ல உதாரணமாகும். உயர் கல்விக்காக தாய்நாடு (இந்தியா) சென்ற இவர் அங்கு இரண்டாண்டுகள் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் பின்னர் சென்னை கிறிஸ்தவக்கல்லூரியிலும் கற்றுத் தேறினார்

அக்காலத்தில் இந்திய சுதந்திர போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவரும் மாணவர் காங்கிரஸ் அங்கத்தவராக விருந்து சுதந்திர போராட்டங்களில் பங்கேற்றார்.

அங்கு "கீபர் [Heber பரராளுமன்றம்" என்ற அமைப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இலங்கை மாணவர்களில் முதலாவது தலைவர் என்ற பெருமையையும் பெற்றார்.

சென்னை பல்கலைக்கழகத்தின் விவாதத்குழுவின் ஓர் அங்கத்தவராக கடமையாற்றியதோடு பேச்சுப் போட்டிகளில் பட்டிமன்றங்களில் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

மீண்டும் 1950 ஆம் ஆண்டு

சென்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன;

இதேவேளை இந்திய பிரதமரை தமிழ்த் தீவிரவாதிகள் சந்திக்கவேண்டும் என்று அவர்களை வற்புறுத்தும் நோக்கம் இந்தியாவுக்கு கிடையாது என்றும் இலங்கை அரசின் தற்போதைய ஆலோசனைகளை தமிழ்த்தீவிரவாதிகள் ஏற்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தாது என்றும் தெரிவிக்கும் டில்லி வட்டாரங்கள்; பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவைக்கும் முயற்சியையே இந்தியா மேற்கொண்டுவருகிறது என்றும்; புதிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்க செயல்திட்ட அறிக்கை ஒரு நியாயமான அடிப்படை அம்சமாக இருப்பதாக இந்தியா கருதுவதாகவும் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

எள்ளங்குளம்....

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

னும் தலைவி மேலானவள் என்ற பொருள்பட நாச்சிமார் என்றே அழைக்கப்பட்டுவருகின்றது. இவ்வாலயம் கிரியாமார்க்க முறைகளின்றி பக்திமார்க்க ரீதியிலே பராமரிக்கப்பட்டும் பூசைகள் நடந்தும் வந்தது. இங்கு சிறந்து விளங்கும் புதிய ஆலயம் ஏறக்குறைய இரண்டரை இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வழகிய ஆலயம் கிரியாமார்க்கங்களுக்கு அமைவாக தற்போது சிவாலயமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

— வ. இராசலிங்கம்

மாணவரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இன்று வெலிக்கடையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக பல இடங்களிலும் பல்வேறுபட்ட வெகுஜன ஸ்தாபனங்களால் உண்ணாவிரதமும் ஊர்வலங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றில் ஒழுங்கற்ற முறையில் வீதியிலே பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப் படுவது தவிர்க்கப்படவேண்டும். இதனால் தொடர்ச்சியாக பாடசாலை மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது. யாழ்நகரிலுள்ள பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் தவறான வார்த்தை பிரயோகித்து மாணவர்கள் ஆசிரியர்கள் தாக்கப்பட்ட சம்பவமும், பகுதிஅரசாங்க அதிகாரிகள் பலவந்தமாக உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதும் பல பாடசாலைச் சிறுவர்கள் ஊர்வலமாகநெடுந்தூரம்வரை அழைத்துச்செல்லப்பட்ட சம்பவங்களையும் நாம் அறிகிறோம். இப்படி மனிதாபிமானமற்ற செயல்கள் வெலிக்கடைச்சிறையில் இறுதிமூச்சுவரை போராடும் இளைஞர்களை அவமதிப்பதாக கருதுகிறோம். எனவேஇவ்வாறான செயல்கள் தவிர்க்கப்படவேண்டும். இதுதவிர பல்வேறு கிராமங்களிலும் மற்றும் இடங்களிலும் போராட்டங்களை நிகழ்த்துவோர் போராட்ட முறைகள் இடம் என்பவற்றை எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்" (மா)

வெலிகடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்க மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை மாலை நடைபெற்ற மக்கள் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

'சற்றர்டேறிவியூ' பத்திரிகை ஆசிரியர் திரு. காமினி நவரட்ன இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களின் நிலையை அறியவும், அவர்களைச் சிறையிலிருந்து வெளிக் கொணரவும், அல்லது சட்டரீதியான பரிகாரம் தேடவும் மக்கள் நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் வெலிக்கடைக்குச் செல்வது அவசியம் என்றும்' சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்களைச் சந்திக்க அனுமதி கிடைக்காத பட்சத்தில்' ஜனாதிபதியைச் சந்தித்து அனுமதி பெறுவதென்றும், தமிழ் இளைஞரின் உண்ணாவிரதம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் பிற அதிகாரிகளையும் சந்திப்பது எனவும் இக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது

விரைவில் கொளும்பு செல்லவுள்ள இக்குழுவில் திருவாளர்கள் ஐ. எல்; சேவியர்; ஆர். பாலசுப்பிரமணியம், ஆகியோரின் சகரிமுத்து, கே. எஸ். ஆறுமுகம், எஸ். இராசையா, எஸ். புவனேஸ்வரன் ஆகியோரும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த சிலரும் இடம் பெறுகின்றனர்.

2 இளைஞர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருபிளிசன் (21 வயது) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்;

இப்பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றுக்கு இரு இளைஞர்களும் சென்ற பொழுது ஆலைக்குள் நின்ற ஆயுதப்படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொழுது இருவரும் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரா-மா)

'அந்தத்' தமிழகம் நோக்கி . . . . .

— தி பொன்னம்பலவாணர்

சிதம்பரத்தில் தினமும் வழிபாடுசெய்வோர் அங்கு நடைபெறும் 'ஸ்படிகலிங்க' அபிஷேகம், இரத்தினசபாபதி அபிஷேகம் என்பன நிகழும் போது ஆலயத்திற்கு செல்வதில் விருப்பாக இருக்கின்றனர். 'ஸ்படிகலிங்க' த்திற்கு தினமும் ஆறுகாலப் பூசையின்போதும் வேதவிதிப்படி அபிஷேகம் நடைபெறுகின்றது. உச்சிக்காலப் பூசையைபொட்டி சுமார் 10 மணிக்குமேல் தினமும் இரத்தினசபாபதி எனும் மாணிக்கத்தாலாகிய நடராசப் பெருமானுக்கு அழகிய அபிஷேகம் நடைபெறுகின்றது;

காலை அபிஷேகத்திற்கு வெள்ளிக்கும்பங்களில் வைதீக முறைப்படி பூசனைபுரிந்து அக்கினி காரியம் செய்து அபிஷேகம் செய்வர்.

[3]

வெள்ளியாலான அபிஷேக வேதிகையில்ஸ்படிகலிங்கத்தை எழுந்தருளப்பண்ணி வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட அபிஷேகச் செம்புகளால் அபிஷேகம் செய்வதும், அபிஷேகம் செய்யும்போது அங்கு தரிசனத்துக்காகவரும் நிலவாழந்தணர் வேதமந்திரங்களைச் சொல்லியவண்ணம் நின்று அபிஷேகத்தைத் தரிசிப்பதும் வேறெந்தத் தலத்திலும்காணக்கிடைக்காத காட்சிகளாகும்;

தினமும் உச்சிக்காலப் பூசையை முன்னிட்டு காலை 10 மணியளவில் ஸ்படிகலிங்கத்துக்கு அபிஷேகம் நடைபெற்றதும் இரத்தினசபாபதி என்னும் நடராஜமூர்த்திக்கும் அபிஷேகம் நடைபெறும்.

சுமார் ஒன்பது அடிகுன உயரமானதும் இரத்தினக் கல்லால் உருவானதும் ஆகிய இரத்தினசபாபதி தீக்ஷிதர்களாகிய நிலவாழந்தணர்களுக்குபிரதேவரிடியாக அக்கினியிலிருந்து தோன்றியது என்றும் நிலவாழந்தணர்கள் வட இந்தியாவிலுள்ள வாரணாசியில் தங்கியிருக்கும் போதுபூசிப்பதற்காக நடராஜப்பெருமானால் வழங்கப்பட்ட மூர்த்தியே இரத்தினசபாபதி என்றும் சொல்லுகின்றனர்.

அபிஷேகமுடிவில் இரத்தினசபாபதிக்கு முன்னும் பின்னும் கர்ப்பூர ஆராதனை செய்வர் பின்புறம் கர்ப்பூர ஆராதனை செய்யும்போது முன்பாகநின்று தரிசிப்போருக்கு, அற்புதச் சோதி மயமான நடராசமூர்த்தியாக இரத்தினசபாபதியின் திருக்கோலக் காட்சி அடியார்களைப் பரவசப்படுத்தும்.

(தொடரும்)

ஆயிரங்கால் மண்டப ஓவியங்களில் 'ஸ்படிகலிங்க' வரலாறு

நடராசப் பெருமான் தன் சிரசில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சந்திர ஒளியினால் ஒரு படிகலிங்கத்தை உருவாக்கி நித்திய பூசைக்காக நிலவாழ் அந்தணர்க்கு வழங்கி இருக்கிறார்;

இவ்வரலாறுசிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தின் மேல் உள்ள ஓவியங்களில் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரலாற்றுக்கு வித்தியாசமான முறையில் ஆதிசங்கரர் திருக்கயிலையிலிருந்துகொண்டுவந்த ஸ்படிகலிங்கங்கள் பலவற்றில் சிதம்பரத்தில் இருப்பதும் ஒன்று என்றும் கூறப்படுகிறது;

இவ்விரண்டு கருத்துக்களின் படியும் மிகவும் புனிதமான பெருமையுடையது ஸ்படிகலிங்கமாகும்

பக்தியுடன் நிலவாழந்தணர்கள் சிற்றம்பலத்தின் முன்பாக அமைந்த கனகசபை மண்டபத்திற்கு ஸ்படிகலிங்கம் இருக்கும் பொன்பெட்டகத்தை எடுத்து வருவதையும் அபிஷேகம் செய்வதையும் காத்திருந்து தரிசனம் செய்வர். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்று அம்சங்களும் குறைவுபடாமலும் திருப்தியான அளவு அபிஷேகத் திரவியங்களால் ஸ்படிகலிங்கத்தை பூசிக்கும் காட்சி ஒரு தெய்வீகக் காட்சியேயாகும்;

"இந்த அரசுக்கு தார்மீகம் பேச உரிமையில்லை"

உண்ணாவிரதத்தில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"தார்மீகம், ஜனநாயகம், சுதந்திரம், சகோதரத்துவம் பற்றிம் பேசுவதற்கு இந்த யு. என். பி அரசிற்கு எதுவித தகுதியோ, உரிமையோகிடையாது. இவையெல்லாமே இந்த அரசு பதவிக்கு வந்தவுடன் படிப்படியாகப் பறிக்கப்பட்டுவிட்டன. 1977 இல் குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டத்தை வாபஸ் பெறும் பிரேரணையை பாராளுமன்றத்தில் பேசிய இன்றைய ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா தான் ஒரு தர்மவானாகக் காட்டிக்கொண்டார். ஆனால் இன்று நடைமுறையில் எதிர்மாறான அரசாங்கத்தையே நடத்துகின்றார்."

இவ்வாறு யாழ்ப்பாணம் புதிய சந்தையடியில் வெளிக்கடைச் சிறைச்சாலை உண்ணாவிரதிகள் விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வாபஸ் பெறும்படி கோரியும் வட-பிரதேச தொழிற்சங்கங்கள்கூட்டுக்குழு நடத்திய உண்ணாவிரதத்தை முடித்துவைத்து அதன் அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில் கூறினார்.

அவர் பேசியதாவது வட-பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு கடந்த வருடம் ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த ஐந்து அம்சக் கோரிக்கையில் இக்கோரிக்கை முக்கிய அம்சமாக இருக்கின்றது. இவற்றை அமுல்படுத்தக் கோரிக் கூட்டுக்குழு பல போராட்டங்களை நடத்தியுள்ளது. மற்ற வெகுஜன இயக்கங்களுடன் சேர்ந்து பொதுப் போராட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போராட்டங்கள் சகல பகுதி மக்களினதும் ஆதரவைப் பெறுவதுடன் அவர்களின் சுயவிருப்பத்துடன் பங்கு கொள்ளும் போரராட்டமாகவே இருக்கும்.

இதுவரை கூட்டுக்குழுவில் சேராத தொழிற்சங்கங்களை இதில் இணைந்து செயல்படுபடியும் வேண்டுகோள் விடப்பட்டது;

துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

(வவுனியா)

ஹொரவப்பொத்தானை வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தந்தையையும் மகனையும் நோக்கி ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது மகன் பலத்த காயமடைந்தார்.

தர்மலிங்கமும், அவரது மகன் ரூபனும் எல்லைபவருமே சைக்கிளில் சென்றனர்.

காயமடைந்தவர் யாழ்: ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படடுள்ளார்; (மா)

"ரவி பற்றி இன்ஸ்பெக்டர் கடுமையாக பிரஸ்தாபித்தார்"

வண. சிங்கராயர் சாட்சியம்

(தொழும்பு)

"ரவியிடம் இருந்து எனக்கு கடிதங்கள் எதுவும் கிடைக்கவில்லை ஏற்கனவே ரவி இந்தியா சென்றதாக நான் புண்ணியாடி சில்வாவிடம் கூறியிருந்தேன்' அவரை நம்பச்செய்வதற்கு அவருக்கு ஏதாவது நான் கூறவேண்டியிருந்தது"

இவ்வாறு வண பிதா ஆபரணம் சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

அவசர காலச்சட்டத்தின் கீழ் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

அரசதரப்பு சட்டத்தரணி கி. ஆர். டி. சில்வா இவற்றை குறுக்கு விசாரணை செய்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"குருவானவரான எனக்கே இப்படியான நிலை என்றால் சாதாரண நபரான ரவிக்கு என்னவெல்லாம் நடந்திருக்கும் என்று நான் எண்ணினேன். புண்ணிய டி சில்வா ரவி பற்றி என்னிடம் தொடர்ச்சியாக கேள்விகள் கேட்டார். ரவியின் வசிப்பிடம் பற்றியும் அவர் என்ன செய்கிறார் ஒன்பது பற்றியும் அவரது நடமாட்டம் குறித்தும் அவர் விசாரித்தார். ரவி ஒரு மருத்துவக் கல்லூரி மாணவன் என்று நான் புண்ணிய டி சில்வாவிடம் கூறினேன். ரவி எங்கே இருக்கிறார் என்று கேட்டபோது அவர் இந்தியாவில் இருப்பதாக கூறினேன் ரவி ஏன் இந்தியா செல்லார் என்று புண்ணிய டி சில்வா என்னிடம் கேட்கவில்லை. ரவியும் நேசனும் இருவெவ்வேறு நபர்கள் குற்றப்புலனாய்வுத் துறையினர் தான் இவர்கள் இருவரையும் ஒருவராக்கினர் இன்ஸ்பெக்டர் கால்பகே என்னைக் கொண்டு ரவி அல்லது நேசன் என ஒழுதச்சொன்னார் என்பது எனக்கு நினைவிருக்கிறது அவர் இவ்வாறு எழுதச் சொன்னபோது அந்த இருவரும் வெவ்வேறு நபர்கள் என்று கூறினேன். அதற்கு அவர் எனக்கு கற்பிக்க வேண்டாம் என்று கூறினார். நான் மௌனமானேன்;

இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—27 (12 9-1985)
கிழமை—வியாழன்
திதி—நிரயோதசி பின்னிரவு வரை
நக்ஷத்திரம்— ஆயிலியம் பின்னிரவு வரை

மேடம்:- விலைபொருள் விருத்தியுடன் விருந்திற்குமிடமுண்டு. ஆராய்ச்சிகளில் ஆர்வம் தோன்றும். வாகன திருப்தி மேனிடும். குடும்பநலனுமுண்டு.

இடபம்:- குடும்பத்திலும் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும். சகோதர சந்தோஷமும் உண்டாம் எதிர்பாராத வரவுகளுக்குமிடமுண்டாம்.

மிதுனம்:- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைபடலாம். தொழில் துறையில் பூசல்கள் இடம் பெறும். பூமிப்பிணக்கும் உண்டு. அமைதி விரும்பத்தக்கது.

கடகம்:- வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப்பாதிக்கும் கொடுக்கல் வாங்கல் பிணக்குமுண்டு; நம்பிக்கை மோசடியுமுண்டு. உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

சிங்கம்:- குடும்பம் இன்று கலைக்கோயிலாகமாறும் ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள் காதலர் வாழ்வில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும் சுகபோக தினம்.

கன்னி:- நண்பர்களுடன் மோதல்கள் இடம் பெறலாம். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாகயிருக்கும் அன்னியர் மத்தியில் நிதானமாகப்பழகவும்;

துலாம்:- தாய்வழி ஆதரவு உண்டு. தனதானிய விருத்தியுமுண்டு கலைவி மேம்பாடும் உண்டு தொழில் மாற்றமும் ஏற்படலாம் சுபதினம்;

விருச்சிகம்:- புத்திர நலனுண்டு. புண்ணிய விருப்பும் மேலிடும் வாழ்க்கையில் வசந்தம் நிலவும் உத்தியோ உயர்வும் தென்படும்;

தனுசு:- பிரயாசை மேலிடும். தெய்வவழிபாடும். மேலோர்க்கும் சந்துருப்பகையும் பொன் பொருள் நஷ்டத்திற்குமிடமுண்டு

மகரம்:- குறிக்கோள் வெற்றியும் உண்டு மனதில் உவகை கூத்தாடும் களத்திரவழிப் பெருமையும் சேரும் காதலர் வாழ்வினும் கனிவான தினம்.

கும்பம்:- தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமை ஏற்றோன்றும். பொருள் விடயத்திலும் கவனம் செலுத்தவும். அயாயகாரியங்களிலும் பங்குபற்றக் கூடாவாம்.

மீனம்:- புண்ணிய யாத்திரையும் செல்ல நேரிடலாம். நல்ல சமயத்தில் பெரியார் ஒருவர் கை கொடுப்பார்: தருமகாரியங்களிலும் ஈடுபடுவீர்கள்.

திருமலை
வே ரவீந்திரன்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
தீயணைக்கும்படை அலுவலகத்திற்கு
இருப்புச் சுருக்குக் கேற் அமைத்தல்,
மகப்பேற்று நிலைய தளபாடம், மற்றும்
அமைப்பு வேலைகளுக்கான

கேள்வி அறிவித்தல்

பிரிவரும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துடனோ அன்றி வேறு அரசாங்கத் நிறுவனங்களுடனோ ரூபா. இரண்டு இலட்சம் (200. 000/-)க்கு மேல் ஒப்பந்தகாரராக பதிவுபெற்றவர்களிடமிருந்து யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 25-09-85ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் தளபாடங்கள்பொருத்தவரை ஒப்பந்தப்பதிவு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

1. பாஷையூர் விளையாட்டு மைதானம் அமைத்தல்;
2. (ஏ) வன்னியசிங்கம் படிப்பகம் அமைப்புவேலை,
   (பி) செங்குந்தா சந்தையில் குடிநீர் மேல் நிலைத் தொட்டி,
   (சி) கொட்டடி வைரவகோவில் ஆஸ்பத்திரி வீதி வடிகால் திருத்தி அமைத்தல்;
   (டீ) செல்லர் வீதியிலுள்ள பாலம் திருத்தி அமைத்தல்
   (ஈ) இராஜசிங்கம் வீதியில் வடிகால் அமைத்தல்;
3. பூனிசெவ் நிட்டத்தின் கீழ் மகப்பேற்று நிலையங்களுக்கு தளபாடங்கள் விநியோகித்தல்.
4. யாழ்: தீயணைக்கும்படை அலுவலகத்திற்கு இருப்புச் சுருக்கு கேற் அமைத்தல்.

யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 24-09-85ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 150/-ம் கேள்வி அவப்புப் பணமாக ரூபா. 1000/-மும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளிக் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 10-9-85. 666

சரவணாலயன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெளிவீதிக்கும் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 1-30, 4-30, 7-00
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.

வெலிங்டன்
10-30, 1-15, 4-15
6-30, p.m.
16 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்

விக்டோரியா சினிமா
10-30, 1-30, 6-45
1-வது மாதமாக
ஓடுகிறது!
நிவாகராஜன், கிளிச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், கிளிக்கமிதா, ஜெய்சங்கர் நடித்த
மாது மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஒலிப்பதிவு கலர்

லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30, 4-45, 7-00
Eagles Attack at Dawn
அது ஓர் பயங்கர சிறைக் கூட்டம். அங்கு சிறைப்பட்டிருப்பவர்கள் இங்கிலிய கொமாண்டோக்கள்; தப்பிவிடுகின்றான் ஒருவன். தப்பி ஓடிய கொமாண்டோவிடம் சக கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று சிறைக்கு ராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது இருந்தும் குறிப்பிட்டநேரத்தில் சிறைக் கூடம் உடைக்கப்பட்டு கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர். நிமிடத்திற்கு நிமிடம் என்ன நடக்கும் என்று ஏங்கவைக்கும் படம்; தவறவிடாதீர்கள்.

சோடா வானில்
ரூ. 12,000 கொள்ளை
(யாழ்ப்பாணம்)
சோடா வியாபாரம் செய்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த வானொன்றிலிருந்து 12,000 ரூபா ரொக்கப்பணம் இனந்தெரியாத - நபர்களால் ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!
சோடா வியாபாரத்தை முடித்துக்கொண்டு வானில் திரும்பும் வழியில் பண்டத்தரிப்பிலுள்ள பிரான்பற்று சுடலைக்கு முன்பாக வானை மறித்த இரு இளைஞர்கள் ஆயுதங்களைக் காட்டிச் சாரதியையும் கிளீனரையும் பயமுறுத்தி விட்டு இக்கொள்ளையை நடாத்தியதாகத் தெரியவந்துள்ளது.
(.)

ராஜா மினி
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.—தொர நடித்த
இன்றுபோல் என்றும் வாழ்க
ஈஸ்மன் கலர்

உஷா மினி
10-30, 1-30, 4-45, 6-45
RAMBO
(ஒரிஜினல் பிரதி)

மனோகரா
வெண் திரையில்
10-30, 2-30, 6-30, 9-30
இன்று முதல்
பாக்கியராஜ், பூர்ணிமா, சுமன்
கல்லாபெட்டி சிங்காரம்
நடிப்பில்
டார்லிங்
DARLING
டார்லிங்
(கலர்)

ஸ்ரான்லி மினி
"KS" திரையரங்கில்
10-10, 12-30, 3-30
4-30, 6-30
10 Force to Navaron
ஹிற்லரின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்தைப் பாதுகாப்பதற்காக 10 தீவிரவாதிகள் ஜேர்மனியில் புகுந்து படையினரை முன்னேற விடாது பாலங்களை தகர்ப்பதும். இன்னும் பல வீரச் சாகசங்கள் நிறைந்த படம்
(Attack Film)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

மரத் தளபாடங்கள் வழங்குதல்

பல்கலைக்கழகத்திற்கு கீழ்க்காணும் தளபாடங்கள் வழங்குவதற்கு பெறியிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

01. பரீட்சை மண்டப மேசைகள்- 655
02. விரிவுரை மண்டப கதிரைகள்- 355
03 மகாநாட்டு மேசை Conference Table- 01

கேள்விகளுக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் 100/-பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 16-09-85ம் திகதிக்கு முன் தேவையான மாதிரி, அளவு விபரங்களைப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

கேள்விகள் அனைத்தும் 23-9-85 ம் திகதி முற்பகல் 10-30 மணிக்கு முன்னர் 'நிதியாளர்' யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். அத்துடன் விண்ணப்பக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் பர/SK/03/23/9/85 என்ற இலக்கமும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.

குறிப்பு: மேற்படி பொருட்களுக்கான கட்டளை கொடுக்கப்பட்டு ஒருமாத காலத்துள் அவை வழங்கப்படவேண்டும்.
668

வட—இலங்கை
ஸ்ரீ பரமானந்த சிறுர் முதியோர் இல்ல ஆச்சிரம தருமம்
வதிரி, கரவெட்டி.
தேவை
ஒரு நிர்வாக முகாமையாளர் (ஆண்)
ஒரு கணக்காளர் (ஆண் அல்லது பெண்)
இரு பெண் பிள்ளைகள்
இல்ல மேற்பார்வையாளர்கள் (பெண்கள்)
ஒரு சமையற் பகுதி மேற்பார்வையாளர் (பெண்)
40 வயதுக்குக் குறையாதவர்களாகவும். சுகதேகிகளாகவும், பதவிக்கு ஏற்ற அறிவு, ஆற்றல், அனுபவம் உடையவர்களாகவும், சமூகசேவையில் ஈடுபாடுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். ஆச்சிரமத்தில் வசிக்கவேண்டும். சுத்த போஷணம் வழங்கப்படும். நியாயமான வேதனம் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.
25-9-85க்கு முன் விண்ணப்பிக்கவும்.
(681)

31-வது நாள் நினைவஞ்சலி

சின்னப்பு காங்கேசு காசிநாதன்
(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா ஓவசியர்)

தோற்றம்: 1909-08-16
மறைவு: 1985-08-13

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரி
மீசாலை தெற்கு, மீசாலை. (648)

ஓராண்டு நினைவஞ்சலி

திரு. பொ. திருவோணம் (மந்திரி)
மலர்வு. 18-4-1913
உதிர்வு: 16-8-1984

திருமதி தி. சின்னம்மா
மலர்வு: 23-9-1916
உதிர்வு: 23-09-1984

திதி: 12-9-1985

அன்பினால் உள்ளங்களை ஆட்சி கொண்டீர்கள்
பண்பினால் பற்பலரை ஈர்த்தெடுத்தீர்கள்
பாசமதை எல்லோர்க்கும் பகிர்ந்தளித்தீர்கள் — எம்மைப்
பரிதவிக்க விட்டு நீங்கள்மட்டும் சென்று விட்டீர்கள்
நீங்கள் பிரிந்து சென்றிங்கே ஆண்டொன்று ஆனாலும்
உங்கள் நினைவெமது உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர் வாழும்!

அன்பு மகன், மருமகள். பேரப்பிள்ளைகள், மச்சான், மைத்துனி, சகோதரர்கள்.
'தேவி பவனம்', வல்லிபுரவதிதை, தரணவாய் தெற்கு, கரவெட்டி. (147)

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி பெரியதம்பி சரஸ்வதி

மலர்வு: 21-02-1931
உதிர்வு: 15-08-1985

இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவி திருமதி பெரியதம்பி சரஸ்வதி அவர்களின் அந்தியேட்டி எதிர்வரும் 14-09-1985 சனிக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
கணவன், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
கொடாவில், தொண்டைமனாறு. (638)

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

இன்று முல்கிரிகல தேர்தல்

(முல்கிரிகல)

முல்கிரிகல இடைத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

ஐ. தே. கட்சி, ஸ்ரீ. ல. சு. கட்சி ஆகியவை உட்பட ஐந்து கவேச்சை வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஒலுமடுவில் ரூபா 3 லட்சம் கொள்ளை!

(மாங்குளம்)

ஒலுமடு முன்னாள் கிராமோதய சபைத் தலைவரின் வீட்டில் நகைகள் உட்பட மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களில் பெரும்பாலானவை அப்பகுதி ஏழைத் தொழிலாளர்கள் பாதுகாப்புக் கருதியும், விவசாயம் செய்வதற்கு அடகு வைத்தவையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலுமடுவைச் சேர்ந்த முன்னாள் கிராமோதயசபைத் தலைவர் ஆ. வேளாயுதம் என்பவர் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் வீட்டிலுள்ளவர்களைப் பயமுறுத்திவிட்டு பொருட்களை கொள்ளையடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

2வது கிரிக்கெட் டெஸ்ட்

இலங்கையிடம் இந்தியா தோல்வி!

(கொழும்பு)

இலங்கை - இந்தியக் கோஷ்டிகளிடையே கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை கோஷ்டி 149 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

இலங்கைக் கோஷ்டி டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்று ஐந்து வருடங்களின் பின், 14-வது டெஸ்ட் போட்டியில் முதலாவது வெற்றி இதுவரகும்

இலங்கைக் கோஷ்டி வெற்றி பெற்றதும், மைதானத்தைச் சுற்றியிருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கூட்டம், மைதானத்தினுள் பிரவேசித்து இலங்கைக் கோஷ்டியின் காப்டன் டுலீப் மெண்டிஸை தூக்கி வானத்தில் 'எறிந்து' பிடித்து தமது மகிழ்ச்சி ஆரவாரத்தை தெரிவித்தது.

விக்கெட் இழப்பின்றி 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இந்தியக் கோஷ்டி, நேற்று தடுப்பெடுத்தாட முற்பட்டதும் தமது விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது இக் கோஷ்டி மதியபோசன இடைவெளியின் போது 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 84 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்திய வீரர்கள் இந்த இன்னிங்ஸில் எவ்வளவு நிதானமாக தடுப்பெடுத்தாடிய போதும், இலங்கை கோஷ்டியின் அதிவேகப் பந்து வீச்சை வீரர்களுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் திணறியதைக் காணக் கூடியதாகவிருந்தது

இந்தியக் கோஷ்டி 7 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றபோது, காப்டன் கபில்தேவும், சிவராமகிருஷ்ணனும் சேர்ந்து ஓட்டங்களின் எண்ணிக்கையை 168 ஆக உயர்த்திய போது சிவராமகிருஷ்ணன் ஆட்டமிழந்தார். இவர்கள் இருவரும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்து 79 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது இறுதியாக காப்டன் கபில்தேவ் 78 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததும், இலங்கை வெற்றி பெற்றது.

இலங்கைக் கோஷ்டியின் அதிவேகப் பந்து வீச்சாளர்களான, ரொமேஷ் ரட்ணாயக்கா 49 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், அசந்த டி மெல் 3 விக்கெட்டுகளையும், ஆக்ஹம 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இந்த டெஸ்டில் வீரர் அமர்கில்வா, சிறந்த வீரருக்கான பரிசைத் தட்டிக் கொண்டார்

ஸ்கோர் விபரம்: இலங்கை: 385, 210 3 இந்தியா: 244,198

(வி)

வெலிக்கடைச் சிறையில் 35 வது நாள்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளை உலகறியச் செய்யவும் முகமாக இன்று சென்னையில் 'ஈழமாணவர் பொதுமன்றம்' (கெஸ்) மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக 'ஈழம் செய்திப்பலகை' கவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' ஈ பி ஆர், எல். எவ்) வெளியிட்டுவரும் இச்சுவரொட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

பொருளாதார நெருக்டிக்குள் ஸ்ரீலங்கா இனவெறி அரசு இஸ்ரேலிய கூட்டிக் எதிரொலி முஸ்லீம் மக்களின் படுகொலைக்குப் பதிலடி! மகாவலிநீரமைப்புத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்க சவுதிஅரேபியாமறுப்பு தெரிவித்துள்ளது, வெலிக்கடைப் போராளிகளின் கோரிக்கைகளை உலகறியச் செய்ய இன்று சென்னையில் 'ஈழமாணவர் மன்றம்' மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்துள்ளது. ஈழமக்களை விழிப்பாயிருங்கள். வவனியாவில் ஈழப்பெண் ஒருத்தியின் மேனி கூலிப்படையினரால் மேயப்பட்டிருக்கிறது வெலிக்கடைப் போராட்டம் 35 வது நாள் நடைபெறுகிறது

(மா)

ஆனைக்கோட்டையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(மானிப்பாய்)

உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி ஆனைக்கோட்டை மக்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடத்தினர் அதனைத்தொடர்ந்த நேற்று மாலை 5 மணிவரை உண்ணாவிரதமுமிருந்தனர்

ஊர்வலம் ஆனைக்கோட்டை ஐக்கிய சன சமூக நிலைய முன்றலில் ஆரம்பித்து ஆனைக்கோட்டைச் சந்தி, மானிப்பாய் வீதி, பிடாரி கோயிலடி வீதி, கரவெட்டிச்சந்தி ஆகிய வீதிகளூடாக வந்து அடைக்கல நாயகி ஆலய முன்றலில் வந்து முடிவடைந்தது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பல சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கியவண்ணம் மக்கள் கோஷமிட்டுச்சென்றனர்.

உண்ணாவிரதத்தின்போது பலர் உரைநிகழ்த்தினர். காழ்.பல்கலைக் கழக மாணவர்களின் விளக்கப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது

இந்த உண்ணாவிரதத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது பங்குத்தந்தை வணபிதா இம்மனுவல் அடிகளார் குளிர்பானம் வழங்கி இதனை முடித்துவைத்தார்

யாருடையது

யாழ் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு என் சங்கரன் என்பவர் விஞ்சர்திரியேட்டருக்கு முன் ஒரு தொகைப் பணத்தை எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.

"இந்து இளைஞன்" இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் "இந்து இளைஞன்" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். 'இந்து இளைஞன்' நல்லூர் உற்சவகால இதழாக வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றம் விசாரணை

(கொழும்பு)

கல்முனை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. க. போல்நல்லநாயகம் தாக்கல் செய்தவை அடிப்படை உரிமைமீறல் மனு விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாதம் 16 ம் தேதி இந்த விசாரணை நடைபெறும். எதிர் மனுதாரர்களுக்கு நோட்டிஸ் அனுப்பவும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (இ)

தமிழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி உயர்வுக்காத் தமிழ் மொழிமூலம் பரீட்சை எழுதிய எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை.

கடந்தவாரம் கொழும்பு கல்வி அமைச்சில் இப்பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இந்த நேர்முகப் பரீட்சைக்கு 160 பேர் அழைக்கப்பட்டிருந்தனர் இவர்களில் ஆறுபேர் மட்டுமே தமிழர்கள் இந்த ஆறுபேரும்கூட ஆங்கிலமொழி மூலமே பரீட்சை எழுதியவர்களாவர். தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதிய எவரும் அழைக்கப்படவில்லை!

இவர்களைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் கல்வி அமைச்சு செயலாளருடனும் கல்விச்செயலாளர் ஆனைக்குழுச் செயலாளருடனும் தொடர்பு கொண்டுள்ளார். (ஐ)

மரண அறிவித்தல்

வடிவேலு சின்னராசா

பொலிகண்டியைச் சேர்ந்த அன்னமுத்து வடிவேலு செல்லம்மா தம்பதிகளின் புதல்வரும் பாக்கியத்தின் அன்புக்கணவரும், அமிர்தானந்தம்மா, சிவராசசிங்கம், சிவபாலசிங்கம் (விசேட சேவை அலுவலர், வக்வெட்டித்துறை), நிர்மலாதேவி, குலவீரசிங்கம் சிவகவிதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், தம்பையா, தங்கம்மா, காலஞ்சென்ற இராசமாணிக்கம், வண்ணமணி, மகேசு, பூமணி ஆகியோரின் சகோதரருமாகிய வடிவேலு சின்னராசா 11-09-1985 அன்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-9-85 இன்று காலை 10 மணிபளவில் ஊரணி மயானத்தில் நடைபெறும் தயவுசெய்து இத்தகவலை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்; கி. சிவராசசிங்கம் (சாமி): மூத்த புதல்வர். 687

மரண அறிவித்தல்

பொன்னுத்துரை துரைரெத்தினம்

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தட்டாதெரு காங்கேசன்துறை வீதியில் வசிப்பவருமான பொன்னுத்துரை துரைரெத்தனம் (மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகளின் விதிதர்) காலமானார். இவர் சரவணபதியின் அன்புக் கணவரும், குணசேகரா (வாக்கர்ஸ் கொழும்பு), காலஞ்சென்ற குலசேகரன் (றிசர்வ் பொலிஸ்), ஜெயசேகரன், காலஞ்சென்ற ஞானசேகரம், விஜயவேனி (யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி) யின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரது பூதவுடல் 12-9-85 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 550/7, காங்கேசன்துறை வீதி, தட்டாதெருவிலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

C S. P. D. GUNASEGARA. (688)

மக்கள்வங்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வித்தலைத் தொடர்ந்து இன்று விடியாழக்கிழமை முதல் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு சகல வடபகுதிக் கிளைகளும் சேவைக்காக திறக்கப்பட்டிருக்குமெனவும் அந்த தினங்களில் சகல வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளை பூர்த்திசெய்யுமாறும், இம்மாதம் 22ம் திகதிமுதல் மறியல்போராட்டம் கால வரையறையின்றி தொடர்ந்து நடைபெறுமெனவும் சங்கம் அறிவித்துள்ளது.

மேற்படி சங்கம் இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில், அடகுவைத்த சகல வாடிக்கையாளர்களையும் 23ம் திகதி 7 30 மணிக்கு அவரவர் வங்கி முன்பாக சமுகமளிக்குமாறும் மேற்படி பத்துதினங்களுக்குள் வங்கி நிர்வாகம் ஒரு சாதகமான நடவடிக்கையை எடுக்கத் தவறினால் அதற்கு அவர்கள் தகுந்த காரணம் காட்டவேண்டுமெனவும் கேட்டுள்ளது. (ச)

10 ஆலயங்கள் தரைமட்டம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் 10 சைவ ஆலயங்கள் முற்றாக எரித்தத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன!

இதுபற்றி திருமலை பிரஜைகள் குழுவினரும், இந்து இளைஞர் சங்கமும் அமைச்சர் செ. இராசதுரையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்

நகரில் மூன்று ஆலயங்களும் கிராமங்களில் ஏழு ஆலயங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன சில ஆலயங்களில் பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (இ)

நன்றி நவில்தல்

அமரர் திரு. ஏணஸ்ட் ஜெயரட்ணம் சாமுவேல்

எனது கணவனின் மறைவு தொடர்பாக, எம் பெருந்தவரில் பங்குகொண்டு, ஆறுதல் கூறி, சகல உதவிகளையும், ஒத்தாசையையும் வழங்கி, இறுதி மரண ஆராதனையில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி புளோரு புஷ்பராணி சாமுவேல்,
சகோதரன்: மு. அ. ஜெயராசா.

"பவள வாசா",
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. 683

இவைத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாராக யாழ்ப்பாணம் வெலிகோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ramber B 10036/81 Eelananu P. O. Box: 49, Telegram: Eelanabu Telephone: 22389 — 24126